# பத்திரிக்கை செய்தி

## விவசாய நில கிணற்றிலிருந்து ஆழ்துளை கிணற்றிற்கு புதிதாக லிவர் ஸ்விட்ச் மின் இணைப்பு தர ரூ.5,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய மின்வாரிய உதவி செயற் பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.அரவிந்தன், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய விவசாய நில கிணற்றிலிருந்து ஆழ்துளை கிணற்றுக்கு புதிதாக லிவர் ஸ்விட்ச் இணைப்பு தர கோரி உதவி செயற்பொறியாளர் மின்சார வாரிய அலுவலகம், சித்தாம்பூண்டி செஞ்சி தாலுக்கா தெற்கு, விழுப்புரம் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ஜெகன்மோகன், உதவி செயற்பொறியாளர், சித்தாம்பூண்டி செஞ்சி தாலுக்கா தெற்கு, விழுப்புரம் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று கூறியதன் பேரில் பின் லஞ்ச பணத்தை குறைத்து ரூ.5,000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் பிரிவு அலுவலகத்தை அணுகி மேற்படி திரு.ஜெகன்மோகன், உதவி செயற்பொறியாளர், மீது புகார்மனு கொடுத்துள்ளார். இப் புகாரின் பேரில் இன்று 23.06.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஜெகன்மோகன், லஞ்ச பணம் ரூ.10,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# **PRESS NOTE**

## **EB ASSISTANT EXECUTIVE ENGINEER ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.5,000/- FOR CONNECTING SWITCH AT DEEP BORE WELL**

The complainant Tr.Aravindhan, is residing at Gingee Taluk, Villupuram District. The complainant had applied new deep borewell switch at the Office of the Assistant Executive Engineer, Sithampoondi, Gingee Taluk, Villupuram District Tr.Jeganmohan, Assistant Executive Engineer, Sithampoondi, Gingee Taluk, Villupuram District, demanded Rs.10,000/- as bribe for processing his application. Later reduced the bribe amount from Rs.10,000/- to Rs.5,000/- Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Villupuram detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized. Today 23.06.2023, during the trap proceedings, Tr.Jegan Mohan, Assistant Executive Engineer, reiterated his earlier demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested.